**செய்தி வெளியீடு எண் : 707** **நாள்: 01.05.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**நெடுஞ்சாலைத் துறையின் 75–வது ஆண்டு விழாவில் பவள விழா நினைவுத் தூணை திறந்து வைத்து முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.2,406.30 கோடி மதிப்பீட்டிலான 32 சாலைப் பணிகள் மற்றும் மேம்பாலப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (1.5.2022) சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடைபெற்ற நெடுஞ்சாலைத்துறையின் 75–வது ஆண்டு விழாவில், பவள விழா நினைவுத்தூணை திறந்து வைத்து, முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் இலச்சினையையும், பவள விழா மலரையும் வெளியிட்டார். மேலும், திருப்பூர், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, மதுரை, காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், திண்டுக்கல், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் 2,123 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 32 சாலைப் பணிகளை தொடங்கி வைத்தார்.

பொருளாதாரத்தின் அங்கங்களான விவசாயம், தொழில், வணிகம், சுற்றுலா, போன்ற துறைகளின் மேம்பாட்டிற்கு சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை பராமரிப்பதும், மேம்பாடு செய்வதும் மற்றும் கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலை அமைப்பதும் நெடுஞ்சாலைத் துறையின் முக்கிய நோக்கங்களாகும். தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறை 1946–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு கடந்த 75 ஆண்டுகளாக தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை உருவாக்கி, பராமரித்து சிறப்பாக பணியாற்றி வருகிறது.

நெடுஞ்சாலைத்துறையின் 75–வது ஆண்டு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 32 சாலைப் பணிகளின் விவரங்கள்:–

- திருப்பூர் மாவட்டத்தில், ரூ.93.90 கோடி மதிப்பீட்டில் பல்லடம் – தாராபுரம் சாலையில் 13.00 கி.மீ நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- நாமக்கல் மாவட்டத்தில், ரூ.40 கோடி மதிப்பீட்டில் மல்லியக்கரை – இராசிபுரம் – திருச்செங்கோடு – ஈரோடு சாலையில் 5.55 கி.மீ. நீள

பல வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், ரூ.74.80 கோடி மதிப்பீட்டில் கைவிடப்பட்ட தே.நெ.45–ல் திருச்சிராப்பள்ளி மாநகரப்பகுதியில் 7.40 கி.மீ. நீள பல வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- மதுரை மாவட்டத்தில், ரூ.50.60 கோடி மதிப்பீட்டில் கைவிடப்பட்ட தே.நெ.45B–ல் மதுரை மாநகரப்பகுதியில் 5 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- காஞ்சிபுரம் மாவட்டத்தில், ரூ.108.50 கோடி மதிப்பீட்டில் தாம்பரம் – முடிச்சூர் – திருப்பெரும்புதூர் சாலையில் 8.40 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- காஞ்சிபுரம் மாவட்டத்தில், ரூ.54.35 கோடி மதிப்பீட்டில் புக்கத்துறை – உத்திரமேரூர் சாலையில் 7.20 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- வேலூர் மாவட்டத்தில், ரூ.43 கோடி மதிப்பீட்டில் திருவலம் – காட்பாடி – வெங்கடகிரிகோட்டா சாலையில் 7.90 கி.மீ. நீள பல வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- திருவள்ளூர் மாவட்டத்தில், ரூ.72 கோடி மதிப்பீட்டில் கவரப்பேட்டை – சத்தியவேடு சாலையில் 10.60 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;
- திருவள்ளூர் மாவட்டத்தில், ரூ.76.65 கோடி மதிப்பீட்டில் வாலாஜாபாத் – சுங்குவார்சத்திரம் – கீழச்சேரி சாலையில் 9.20 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;
- திருவள்ளூர் மாவட்டத்தில், ரூ.49.28 கோடி மதிப்பீட்டில் சிங்கப்பெருமாள் கோயில் – திருபெரும்புதூர் – திருவள்ளூர் – செங்குன்றம் சாலையில் 4.10 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;
- திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.87.50 கோடி மதிப்பீட்டில் கைவிடப்பட்ட தே.நெ.209–ல் ஒட்டன்சத்திரம் நகரப்பகுதியில் 7.67 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;

- திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.79.07 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் – பாலகனூத்து – ஒட்டன்சத்திரம் – தாராபுரம் – திருப்பூர் சாலையில் 12.60 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.140 கோடி மதிப்பீட்டில் கடலூர் – சித்தூர் சாலையில் 19.50 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.122 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை – அரூர் (வழி) தானிப்பாடி சாலையில் 13.80 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.296.10 கோடி மதிப்பீட்டில் திண்டிவனம் – மரக்காணம் சாலையில் 32 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;
- விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.126.60 கோடி மதிப்பீட்டில் வெள்ளிமேடுபேட்டை – பாண்டி (வழி) மயிலம் சாலையில் 15.40 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;
- கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.70.29 கோடி மதிப்பீட்டில் கடலூர் – சித்தூர் சாலையில் 8.70 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல்;
- அரியலூர் மாவட்டத்தில், ரூ.129 கோடி மதிப்பீட்டில் அரியலூர் – ஜெயங்கொண்டம் (வழி) செந்துறை சாலையில் 17.20 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;
- தருமபுரி மாவட்டத்தில், ரூ.313.50 கோடி மதிப்பீட்டில் தருமபுரி – அரூர் (வழி) மொரப்பூர் சாலையில் 34.60 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;
- தருமபுரி மாவட்டத்தில் ரூ.96.50 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை – அரூர் (வழி) தானிப்பாடி சாலையில் 15.20 கி.மீ. நீள இரு வழிச்சாலையை, நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல்;

என 255 கி.மீ. நீளச் சாலைகளை ரூ.2123.64 கோடி மதிப்பில் நான்கு வழிச் சாலைகளாக அகலப்படுத்தும் பணியை தொடங்கி வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் வகையில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கண்ணாடி இழையிலான நடைமேம்பாலம்;

மதுரை இராஜாஜி மருத்துவமனை அருகில் கோரிப்பாளையம் சந்திப்பில் ரூ.199.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சாலை மேம்பாலம்;

சென்னை மாநகரில் மத்திய கைலாஷ் சந்திப்பில் ரூ.46.54 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மேம்பாலம்;

என மொத்தம் 282 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நடைமேம்பாலம் மற்றும் மேம்பாலங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பின்னர், நெடுஞ்சாலைத்துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற 5 மிக மூத்த பொறியாளர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கௌரவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர், அரசுக் கொறடா திரு.கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கப்பாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு.கே.ஜெயக்குமார், திரு.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள், திரு.இ.கருணாநிதி, திரு.கே.கணபதி, டாக்டர் எழிலன், திரு.எம்.கே.மோகன், திரு.எஸ்.அரவிந்த ரமேஷ், திரு.ஏஎம்வி.பிரபாகரராஜா, திரு.எஸ்.எஸ்.பாலாஜி, திரு.பி.கார்த்திகேயன், துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் திரு.பி.கணேசன், இ.ஆ.ப., முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, திரு. பி.ஆர்.குமார், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in